International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 - 2 April - June 2026

Published on 14, April - June 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# சோலை சுந்தரபெருமாள் சிறுகதைகளில் வண்டல் வட்டாரச் சொற்கள்

**பூ. பகலவன்**
முனைவர் பட்ட ஆய்வாளர்
**முனைவர் அ. இருதயராஜ்**
நெறியாளர், உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம்
பல்லாவரம், சென்னை – 117

**முன்னுரை**

ஒரு மொழியின் சிறப்புத் தன்மையையும், அம்மொழியைப் பேசும் மக்களின் பண்பாடு, பழக்கவழக்கங்கள் எடுத்துரைக்கும் திறன் வாய்ந்தவை அவ்வவ் மொழிகளின் வட்டார வழக்குச் சொற்களாகும். அவ்வகையில் ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தின் வட்டார வழக்குச் சொற்கள் சோலை சுந்தர பெருமாள் எழுத்துகளில் மலிந்துள்ளன. அவற்றுள் ஓராங்காணி என்னும் சிறுகதைத் தொகுப்பில் விரவிக்கிடக்கும் சொற்களைத் தொகுத்துரைப்பதாக இக்கட்டுரையின் களம் அமைகிறது.

**வட்டார வழக்கு**

உலகில் பேசப்படும் மொழிகள் அனைத்தும் அவை பேசப்படுகின்ற இடம், சூழல், காலம் முதலிய பல்வேறு காரணங்களால் சிறு சிறு மாற்றங்களைப் பெற்றே வழங்கி வருகின்றன. அவ்வாறு வழங்கப்படும் சொற்களையே வட்டார வழக்குச் சொற்கள் என்கிறோம்.

தமிழ் மொழியும் ஒன்றே ஆயினும் வட்டாரங்களுக்கென்று தனி மொழிவழக்குகள் இருக்கின்றன. அந்தந்த பகுதிகளுக்கு என்று தனித்தனி தொனிகளும், வாஞ்சைகளும், விளிப்புகளும் இருக்கின்றன. அவ்வவ் வட்டாரங்களின் பழக்கவழக்கங்கள் தொழில்கள் பழமொழிகள் சடங்குகள் சார்ந்தும் சொல் மாறுபாடுகள் இருக்கின்றன இவை பேச்சு வழக்கில் இருப்பது வட்டார அடையாளமாகவும் இருக்கிறது இவ் வட்டார வழக்குகள் படைப்பிலக்கியங்களில் இடம்பெறுகின்ற போது தமிழில் அழகு கூடுகிறது.

**சோலை சுந்தரபெருமாள்**

சோலை சுந்தரபெருமாள் வண்டல் வட்டாரத்தைப் பற்றிய முழைமையான வாழ்வியலையும் வெளிக்கொணர்ந்து விட்டார் என்பதை விட, ஒருங்கிணைந்த தஞ்சாவூர் மண்ணின் விவசாய வாழ்க்கையை முழுமையாகச் சொல்லிவிடத் தொடர்ந்து முயன்றவர் என்று நிச்சயம் கூறலாம். சோலை சுந்தரபெருமாளின் எழுத்துகள் வண்டல் இலக்கியம் என்ற வகைமையின் அடையாளமாக இருந்தன. எளிய மக்களின் வாழ்க்கையை அழகியலுடன் முற்போக்கு இலக்கிய இயக்கத்தின் அரசியல்பார்வைகளை முன்வைத்தே எழுதினார்.

இந்துத்துவ உயர்சாதி பண்பாட்டு அம்சங்களையே இலக்கியமாக்கிக் கொண்டிருந்த தஞ்சைப் படைப்பாளிகளிடமிருந்து மாறுபட்டு ஒடுக்கப்பட்ட விவசாயத் தொழிலாளர்களின் வாழ்க்கையைத் தீவிரமாக இலக்கியமாக்கியவர் சோலை சுந்தர பெருமாள் ஆவார். 1980களின் இறுதியில் எழுதத் தொடங்கி இதுவரை நாவல்கள், குறுநாவல்கள், சிறுகதைகள்

என இவரது படைப்புப் பணி பரந்து விரிகிறது. கீழ்வெண்மணி நிகழ்வை மையமாக வைத்து இவர் எழுதிய ‘செந்நெல்’ நாவல் தமிழின் மிக முக்கியமான நாவல்களில் ஒன்றாகத் திகழ்கிறது. இந்நாவல் பல்வேறு பல்கலைக் கழகங்களில் பாடமாக வைக்கப்பட்டுள்ளது. பல்வேறு நூல்கள் ஆங்கிலத்திலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. இவரது எல்லா படைப்புகளும் ஒடுக்கப்பட்ட மக்களின் குரலாக ஒலிப்பவை. இவருடைய எழுத்துகளும் சிறுகதைகளும் ஆசிரியராகப் பணியாற்றிய அவரது பணி அனுபவத்தின் வெளிப்பாடாகவே இருப்பதையும் காண முடிகிறது

‘சங்கீதமும், காதலும், காமமும், ஆண்-பெண் உறவும், பூவும் வாசமும் என்றே சுழன்றுகொண்டிருந்த தஞ்சை எழுத்துலகில் சேறும் சகதியும், சாட்டையடியும் சாணிப் பாலும், செங்கொடியும் எனக் கொண்டு வந்து சேர்த்தவர் சோலை சுந்தரபெருமாள்’ என்று எழுத்தாளர் ச.தமிழ்ச்செல்வன் மதிப்பிடுகிறார்.

**ஓராங்காணி**

கிராமத்து ஏழை எளிய மக்கள் நடுத்தர மக்கள் இவர்களது பிரச்சனைகளையும் அவற்றின் தீர்வுக்காக அவர்கள் படும் பாட்டையும் ஆழ்ந்த அனுதாபத்துடன் கவனிக்கிறார் சோலை சுந்தர பெருமாள். கல்வி மருத்துவம் வேலை முதலை அடிப்படை வாழ்க்கை தேவைகளுக்காக நகரங்களுக்குச் செல்ல நேரும் கிராம மக்கள் எத்தகைய இன்னல்களையும் இழிவுகளையும் எதிர்கொள்ள நறுகிறது என்பதையும் கிராம அதிகாரிகள் மற்றும் ஆட்சியாளர்களின் துணையுடன் மக்களின் உரிமைகளும் உடைமைகளும் நயவஞ்சக சக்திகளால் எவ்வாறு தட்டி பறிக்கப் படுகின்றன என்பதையும் இந் நூலில் வரும் கதைகளில் காண்கிறோம் அது மட்டுமல்ல கிராமத்து இளைஞர்களின் மூடநம்பிக்கை ஆணாதிக்க மனப்பான்மை கடமை தவறும் போக்குகள் மதுபான கொடுமைகள் தலை முறை இடைவெளி முதுமையின் துயரநிலை இவற்றை காண்கிறோம் அத்துடன் கிராம மக்களுக்கே உரிய புத்திசாலித்தனத்தையும் பார்க்கிறோம் பல்வேறு பரிணாமங்களில் கிராம மக்களின் வாழ்க்கை கூறுகளை இக்கதைகள் வெளிப்படுத்துகின்றன.

**இறுக்கம்**

1. நாடுமாறி - நிலையில்லாதவன்
2. அன்னியோன்னியம் - இணக்கம்
3. சங்கை - சொரணை, கூச்சம்
4. அங்கலாய்ப்புகள் -
5. ராமுச்சூடும் - இரவு முழுவதும்
6. ஆயி அப்பன் - அம்மா அப்பா
7. பொண்டுவோ - பெண்கள்
8. துண்ணூறு - திருநீறு
9. கண்ணாலம் - கல்யாணம், திருமணம்

**பொறுத்திரு**

1. அப்பையிலிருந்து - அப்போதிலிருந்து
2. புல்லறுவாய் – புல் அறுக்கும் அரிவாள்
3. ஆளடி, ஆளோடி - வீட்டின் ஒரு பகுதி
4. வடவண்ட - வடக்குப் பக்கம்
5. ஈக்குக்குச்சி - தென்னை ஓலையின் நடுப்பகுதி, கரையான் அரித்துப்போன கீற்று
6. கன்னி மூலை - தென்மேற்குத் திசை
7. தலைச்சன் - மூத்த பிள்ளை
8. எடைச்சன் - இடைப் பிள்ளை
9. பூசர மரம் - பூவரசு மரம்
10. சேக்காங்காட்டியும் - சேர்ப்பதற்குள்
11. அரக்க பரக்க - அவசர அவசரமாக
12. வெக்கை - புழுக்கம், வெப்பம்
13. குறுமாடி - சிறிய அளவிலான படிகளைக் கொண்ட வீட்டின் அமைப்பு
14. நன்னிபுன்னியளவாவது - கொஞ்சத்தில் கொஞ்சமாவது
15. சொளுப்ப - சொற்ப
16. வள்ளிசா - எளிதாக
17. தென்னல் - தென்றல்
18. மதாளிச்சுப் போச்சு - பயிர் விளையத் தொடங்கி வீணாதல்
19. ஜக்கியா இருக்கு - பயமாக இருக்கிறது

**ரணம்**

1. பூளை - கண் பொங்கி வெளிவரும் கசடு
2. கவுச்சி - கெட்ட வாடை, மாமிச உணவு
3. சீச்சிட்டு - மண்ணை மேலாகக் கீறிவிட்டு
4. கொன்றை வச்சு வெட்டு - மரத்தின் மேல் நின்று கொண்டு ஒவ்வொரு பகுதியாக வெட்டி முடிக்கும் ஒரு முறை
5. கொய்யோ மொறையோன்னு – காரணமின்றி கோபமாகவும் சத்தமாகவும்

கத்திக்கொண்டிருப்பது

6. விதிர் கலங்கி - திடுக்கிட்டுப் போய், மனம் அஞ்சி கலங்கி, செய்வதறியாது நிற்கும் நிலை
7. குருனி - ஓர் அளவைப் பெயர்
8. காவுந்தா - பாதுகாப்பா
9. ஒணைக்கயா இருந்துச்சு - இதமாக இருந்தது
10. வயித்தில் சொரசொரன்னு இருந்துச்சி - புதிய இடம், நபர், செயல் காரணமாக அடிவயிற்றிலிருந்து கிளம்பும் ஓர் அச்ச உணர்வு

**கணப்பு**

1. முந்தி விரிச்ச நாள்லருந்து - திருமணமாகி முதலிரவு முடிந்த நாள் முதல்
2. மப்பும் மந்தாரமுமாய் - மேகமூட்டமாய்
3. கமுகு-தென்னை மட்டையை அப்படியே முடையும் போது இன்னொரு மட்டையை இரண்டாக வகுந்து போட்டு செவ்வக வடிவில் முடைவது, ஓலையை விரித்துப் போட்டு பின்னால் அப்படியே பின்னுவதால் அழுத்தம் திருத்தமாக இருக்கும்
4. சாக்கு படுதா - சணல் சாக்கு, மற்றும் உரச்சாக்குப் பைகளை ஒன்றாக இணைத்துச் செய்யபடும் திரை போன்ற மறைப்பு
5. லோலு பட்டு - அல்லல் பட்டு
6. ஒக்கத்தக்க - கூடமாட
7. சுளுவா - எளிதாக
8. கிட்டிய கட்டுறாரு - விடாப்பிடியா நிற்கிறார், கிடுக்கிப்பிடியாய் நிற்கிறார்
9. தோது பண்ணிக் கொடு - ஏற்பாடு செய்து கொடு
10. பணையல் - அழுத்தமான இரும்பிலான உருளை, செவ்வக/சதுர வடிவத்தில் உள்ள அடிதாங்கி
11. யாவாரி - வியாபாரி
12. அத்தக் கூலிக்காரன் - தினக்கூலிக்காரன்

**புத்தி**

1. சமதையா - சரிசமமாக
2. கண்டுமொத ஆன நெல்ல - நன்றாக விளைந்து வந்த நெற்பயிரை
3. சௌசன்னியமா - சௌகரியமாக

**தூண்**

1. கமாஸ்காரன் - தோப்பில் கள்ளு இறக்க மரம் கட்டிருக்கும்போது அந்த கள்ளை வேற்று ஆள்கள் திருட்டுத்தனமாக இறக்கி விடாமல் காவல் காக்கவும், கள்ளு இறக்கும் நாடார் ஏதும் தில்லு முல்லு செய்து விடாமலும் பார்த்துக் கொள்ளும் ஆளுக்குரிய பெயர்
2. வெரசா - விரைவாக

**ஓராங்காணி**

1. சில்லாப்பில் - மகிழ்ச்சியில்
2. செலாமணியாய் -
3. நிகா தெரியாமல் - நினைவு தெரியாமல்
4. வசுக் கொண்டிருப்பாள் - திட்டிக் கொண்டிருப்பாள்
5. சத்த வண்டி - வாடகை வண்டி (சத்தம்-வாடகை)
6. மோட்டுவளை - மேற்கூரை
7. ‘பிகு’ பண்ணி - கொடுக்க மாட்டேன் என்ற தொனியில் நடந்து கொள்வது
8. நீல ஜம்பர் - நீல நிற மேலாடை (ஜம்பர் - பெண்களின் மேலாடை)
9. சல்தியா - சீக்கிரமாக

**இருப்பு**

1. உச்சி உருமம் - மதியம்
2. காங்கை வெக்கலாய் வீசியது -
3. மூணு மா - நில அளவுப்பெயர் (100குழி ஒரு மா)
4. ‘பார்’ அணைத்து - மண்ணை அணைத்து வாய்க்கால் வரப்பு ஏற்படுத்துதல், நீரோடும் வழி செய்தல்
5. ஜக்கியாவும் இருக்கு –
6. ‘கான்’ - ‘பார்’ போலவே கொல்லையில் அமைக்கும் ஓர் அமைப்பு. (கானு கிழிச்சி விதை விதைத்தார்)
7. ஆவாட்ட - வாட்ட / ஆவாட்டி – தீயில்/ சூட்டில் காட்டி வாட்டுதல்
8. கரிச்சிக்கொட்டுதல் - பொறாமையில் பிறரை வசைபாடுதல்
9. ஏணை - தொட்டில் (குழந்தை ஆடும் ஊஞ்சல்)
10. ஆத்துப்போச்சு - ஆறிப்போச்சு, குறைந்துவிட்டது.

**பொலி**

1. தத்தாரியா –

தறுதலையா,பொறுப்பில்லாத வினா

2. கதண்டு - தேனீ போல் கூடுகட்டி வாழும் ஒரு வகை நச்சு வண்டு
3. தொசங்கட்டிக்கொண்டு – மல்லுக்கட்டிக்கொண்டு
4. மூங்கில் பிளாச்சி – மீங்கிலைப் பிளந்து நீளமான சிறு சிறு துண்டுகளாக ஆக்கியது.
5. ஓமளிப்பு – பொறாமை
6. எரவாணம் – குடிசை வீட்டின் ஒரு பகுதி
7. தாட்டியான ஒடம்பு – உறுதியான உடம்பு
8. தேசாந்திரியாய் – நாடோடியாய்
9. கிடை(கெடை)–ஆடு/மாடுகளை இரவில் நிலத்தில் தங்க வைத்து அவற்றின் கழிவுகளை உரமாக்கும் ஒருவகையான செயல்முறை.
10. விண்ணப்படுவது – காயப்படுவது
11. தென்னண்ட பக்கம் – தெற்குப் பக்கம்
12. ரோதனை – சிக்கல்,சிரமம், சங்கடம் (ஒரே ரோதனையா போச்சு)
13. கிடாரி/கெடேரி – பசு மாடுகள் (பொதுவாகவே பெண் மாடுகளைச் சுட்டும் சொல்)
14. பூசரந்தழை – பூவரச மர இலை
15. சூட்டுக்கோல்–மாடுகளின் கொம்புகளைச் சீராக்க நெருப்பில் சூடாக்கிப் பயன்படுத்தப்படும் ஒருவகைக் கருவி)
16. ஆச்சி – வயதில் இளைய பெண்களை விளிக்கும் சொல் (தங்கை முறை உள்ளோரை ஆச்சி என்றே விளிப்பது (தங்கச்சி என்பதன் சுருக்கமாக இருக்கலாம்)

**அக்கறை**

1. ஒப்பாரு – உங்க அப்பா (ஒப்பாரு எங்க போனாரு)
2. சங்கையாக – கூச்சமாக (சங்கை கெட்டவன் என்று வசைக்குப் பயன்படுத்துவதும் உண்டு)
3. ஒண்ணுவிட்டு ஒண்ணு பேச்சு – ஒன்னுட்டு ஒன்னு – வீம்புக்காக/சண்டை போடுவதற்காக விதண்டாவாதமாகப் பேசுவது.

**வேலி**

1. பாந்தமா – அழகாக, பெரிதாக
2. அகட பகட – கேலி கிண்டல், புறம் பேசுதல்
3. பண மொடை – பணத் தேவை

**வைக்கப்போரும் கடாவடிக்கு வாக்கப்பட்டவளும்**

1. பஞ்சாரம் - கோழி கவிழ்க்கும் கூடை
2. கடாவடி - கதிர் அடித்து வைக்கோல் போராகப் போட்டு வைத்து பின்னர் அதனைக் களத்தில் பரப்பி விட்டு மாடுகளைக் கொண்டு மிதிக்க விட்டு எஞ்சியுள்ள நெல்மணிகளை எடுக்கும் முறையின் பெயர்.
3. நருவுசா - திருத்தமாக (நருவுசா வேலை செய்வான்)
4. உருமம் - மதியம்
5. பிரிவிடுதல் - வைக்கோலைத் திரட்டிக் கட்டுவதற்காக வைக்கோலையே கயிறாகத் திரிக்கும் செயல்.
6. பங்கீடாய் - பங்குடாய், பங்குடு பண்ணி வை (தூக்கு வாளியைப் பங்கீடாய் வைத்தாள்)
7. கோக்காலி - வைகோலை திரட்ட பயன்படுத்தும் மரக் கிளையால் செய்த ஒரு கருவி.
8. லெங்குசு - எளிது (எவ்வளவு லெங்குசா இல்ல)

**புயல்**

1. ஆண்டுகாலம் மரம் - ஏற்றம் போட மையமாய் நிறுத்தும் மரம் **Y** வடிவில் இருக்கும். (பெரும்பாலும் ஒதிய மரம் பயன்படுத்தப்படும்)
2. கொடலை – மழையில் நனையாமல் இருக்கப் பயன்படுத்தவது. (அகலமான ரெண்டு மூணு கீத்தை மடக்கி ஓலை பக்கம் ஒன்றாய் சேர்த்து இறுக்கமாக கட்டி விடுவார்கள் கீத்து நரம்புகளையும் ஒத்தாப்புல முடிச்சு போட்டுக் கொள்வார்கள்)

**முடிவுரை**

சோலை சுந்தரபெருமாள் அவர்கள் இந்த ஓராங்காணி என்னும் சிறுகதைத் தொகுப்பில் வண்டல் வட்டார மக்களின் வாழ்க்கை போக்குகளையும் பண்பாடுகளையும் சூழ் நிலைகளையும் உள்ள இயல்புகளையும் ஏக்கங்களையும் கனவுகளையும் ஏமாற்றங் களையும் எதார்த்தமாகவும் எவ்வித ஆர்ப்பாட்டமும் இன்றியும் கலை நயத்துடனும் எழுதியுள்ளார்.